**<u>சார்பு நீதிமன்றம், இலால்குடி.</u>**

நாள்:31.01.2023 செவ்வாய்கிழமை
OS.No. 170/2018 DW1: தங்கமணி

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் பெற்றோர் பெயர் ஆறுமுகம், சாமியம்மாள் என்றால் சரிதான். சப்பாணி, ராமன், நான் ஆகிய மூவரும் மற்றும் மலர்கொடி என்ற சகோதரியும் வாரிசுகள் மலர்கொடி உயிருடன் இருக்கிறார். அது குறித்து எதிர்வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர் 1986ல் இறந்ததை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு நான் தான் விபரம் சொன்னேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து சரிகண்டு கையெழுத்து போட்டேன். அதில் தாவா சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது என்று சொல்லியிருப்பது சரிதான். நாங்கள் மூன்று பேரும் எழுத்து பூர்வமாக பாகப்பிரிவினை செய்துகொள்ளவில்லை. பெற்றோர் இறந்த பிறகு வாய்மொழி பாகமும் செய்து கொள்ளவில்லை. இது வரை பாக பிரிவினை கோரி வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்வழக்குரைக்கு நான் தான் விளக்கம் சொன்னேன். 09.12.1989 அன்று ஏற்பட்டதாக சொல்லப்படும் ஆவணம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவு எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெயரிலும் 1ம் பிரதிவாதி பெயரிலும் பட்டா மாறுதல் செய்ய எழுத்து பூர்வ சம்மதம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதலின் போது வாதிக்கு நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.பி.வா.சா.ஆ 1 ஆவணம் வாதி பெயரை தவிர்த்து ஏற்பட்டிருக்கும் ஆவணம் என்றால் சரிதான். வாதிக்கு அறிவிப்பு அனுப்பாமலும், அவருக்கு சம்மதம் பெறாமலும், பெறப்பட்டிருக்கும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் எங்களுக்கு முழு உரிமை ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. அவர் எழுதி கொடுத்ததால் தான் மாற்றினோம். வாதியும் அவரது

மனைவியும் 09.12.1989 பத்திரத்தில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். வாதி அவரது மனைவி ஆகியோர் அந்த பத்திரத்தை எழுதி கொடுக்கவில்லை என்றும் வாதியின் மனைவி ஆறுமுகத்துடைய வாரிசே இல்லை என்பதால் அவர் எழுதி கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் வழக்கிற்காக நான் அவர்கள் கையெழுத்திட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 ஆவணம் வாதியோ, அவரது வாரிசோ கையெழுத்து இடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் வாதியை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றும், அந்த ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டிருக்கும் பி.வா.சா.3,4 பட்டாக்கள் மற்றும் வீட்டு வரி ரசீதுகள் செல்லாதவை மற்றும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியமளிக்கிறேன். அவர் படுத்தப்படுக்கையாக இருக்கிறார். அதற்கான மருத்துவ ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க போவதில்லை. அவருக்காகவும் சாட்சியம் அளிப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஏற்படாததால் வழக்கு சொத்தில் அவரது பாகத்தை கேட்க அவருக்கு உரிமை இருக்கிறது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் மூலம் பாகப்பிரிவினை செய்து கொள்ள ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல. ஒற்றை மின் விளக்கு இணைப்பு வழக்கு சொத்தில் இருக்கிறது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா மாறுதல் தொடர்பாக வாதிக்கு எழுத்து பூர்வமாக பட்டா மாறியதை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் எழுதி கொடுப்பது சம்மந்தமாக வாதிக்கு நான் தெரியப்படுத்தவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் பாகப்பிரிவினை செய்து கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் கபிலம் என்பர் ஒருவர் இருக்கிறார். அவர் தகப்பனார் பெயர் சந்தானம் அவருக்கு பூர்வீகம் எங்கள் ஊர் என்றால் சரிதான். எங்க வீட்டிற்கு அருகில் தான் இருக்கிறார்.

அவருக்கு எங்கள் குடும்ப விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். அவருக்கும் எனக்குங்ம விரோதம் எதுவும் இல்லை. அவர் தான் வா.சா.2 என்றால் சரிதான். வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

/Signed/
தங்கமணி

/Signed /
A.B.நசீர் அலி, B.A.,B.L.,
சார்பு நீதிபதி(FAC)
இலால்குடி